**ஹிக்கடுவ நகர சபை**
**காலி மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹிக்கடுவ நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது கிடைத்த கழிவு ரூபா 111,794 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தவணை ரூபா 674,708 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த 06 நிர்மாண வேலைகளின் பெறுமதி ஆகிய ரூபா 2,932,628 தொகை நிதிக் கூற்றுக்களில் நிர்மாண வேலைக் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 135,358 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட் டுள்ள மீதிகளிடையே ரூபா 4,307,977 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணப்படும் சமமின்மைகள் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 3 வருடங்கள் முதல் 11 வருடங்கள் வரையான காலம் முதல் காணப்படும் 04 கணக்குகள் தொடர்பாக கூட்டுத் தொகை ரூபா 8,719,992 தொகைக்கான மீதிகளை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வேன். |
| **(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான காலப்பகுதிக்கான சபையின் 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 760,970 தொகை நிர்மாணவேலைக் கடன் கொடுத்தோரினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடுத்த வருடம் சரி செய்வேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 113,676,949 தொகைக்கான 11 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | 52,200 | 01 வருடத்திற்கும் 06 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் முதல் காணப்பட்ட நிமித்தத் துணைக் கட்டுநிதி மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 2015 ஜூலை 10 ஆந் திகதிய PED/A/02/2015 இலக்க பொது நிதி சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான சிதைவுற்று காணப்பட்ட பெக்கோ லோடர் வண்டியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | -- | சபைக்குச் சொந்தமான கணினிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 2,993,582 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,752,199 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 26,050,000 | 24,668,963 | 22,379,637 | 28,646,334 | 21,878,000 | 24,612,680 | 22,491,576 | 26,357,008 |
| வாடகை | 7,036,000 | 6,927,690 | 6,900,143 | 4,696,424 | 8,070,000 | 5,848,146 | 5,847,433 | 4,647,482 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,846,000 | 1,107,260 | 1,243,830 | 362,744 | 1,836,000 | 780,600 | 821,360 | 499,314 |
| | 34,932,000 | 32,703,913 | 30,523,610 | 33,705,502 | 31,784,000 | 31,241,426 | 29,160,369 | 31,503,804 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய ஒட்டு மொத்த வருமானம் ரூபா 64,207,717 தொகையாக இருந்த போதிலும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 30,523,610 தொகை ஆக காணப்பட்ட மையால் வருமானம் சேகரித்தலின் முன்னேற்றம் 48 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பாதீட்டின் பிரகாரம் வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வீதவரி வருமானம் ரூபா 44,927,742 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 16,281,409 தொகையாகக் காணப்பட்டமை யால் வருமான சேகரிப்பின் முன்னேற்றம் 36 சதவீதம் ஆக இருந்தது. இதன் பிரகாரம் வீதவரி அறவீடு செய்தல் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(1) பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வீதவரியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 7,889,962 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,193,138 தொகையாகக் காணப்பட்டமையால் வருமான சேகரிப்பின் முன்னேற்றம் 41 சதவீதம் ஆக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,931,979 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 37,541,692 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் VI ஆம் பகுதியின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரத்தை செயற்படுத்துவதற்காக மற்றும் கடமைகளை நிறைவேற்றும் கருமங்களுக்காக தேவை என சபைக்குத் தோன்றும் போது முடிந்தளவு கருமங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய இருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்து இருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### (ஆ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை நிதியத்தை பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 926,883 தொகைக்கான 3 நிர்மாணவேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிய 2015/53 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 42 ஆம் அதிகாரத்தின் பிரகாரம் குப்பை முகாமைத்துவத்திற்காக மீளாய்வாண்டிற்கான போது திட்டம் ஒன்று மற்றும் வேலைத் திட்டம் எதுவும் சபையிடம் காணப்படவில்லை. | குப்பைகளை அகற்றுவதற்காக முறையான நீண்டகால வேலைத் திட்டம் தேவை. | 2019 ஆண்டு சேதனப் பசளை செயற்தளங்கள் இரண்டு நிர்மாணிக்க எதிர்பார்த்துள்ளேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்தப்பட வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **ஊழியர் கடன்** | | |
| சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற மற்றும் சேவையை வரிதாக்கிய இரண்டு ஊழியர்களிடம் மற்றும் தற்காலிகமாக கடமையாற்றிய 11 பேரிடம் கூட்டுத்தொகை ரூபா 88,602 இற்கான கடன் மீதியொன்று மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடு செய்திருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | நிலுவைக் கடன் மீதி எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலா சபையில் பதிவு செய்திருந்த ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தங்குமிடங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய 1 சதவீத வரி செலுத்துவதை புறக்கணித்த 10 நிறுவனங்கள் மீது சட்டநடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வரி செலுத்துவதை புறக்கணித்துள்ள நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சிறிய தங்குமிடங்கள் விலா என நடாத்தப் படுவதுடன் இந்த 10 ஹோட்டல்களும் தற்போது செயற்படாத நிலையில் காணப்படு வதுடன் சுற்றுலா சபையில் பதிவினை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| (ii) | சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனங்களில் இருந்து 1 சதவீத வரி அறவிடுவதற்காக மொத்த வருமானத்தை உறுதிப்படுத்துவ தற்காக அந்த நிறுவனத்தின் கணக்காய்வு அறிக்கை மீது உறுதிப் படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களை பெற்றுக்கொள்ளாமல் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் தயாரிக்கப்பட்டு வழங்கியிருந்த வருமான அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடப்பட்டு இருந்தது. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பெற்றுக்கொள்ளக் கூடியாக இருந்த ஒரு ஹோட்டலில் இருந்து மாத்திரம் மொத்த வருமானத்தின் மீது வரி அறவிடும் போது மேலும் ரூபா 16,264,589 தொகை ஒன்று 2016 ஆண்டு மற்றும் 2017 ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டியிருந்தது. | கணக்காய்வு அறிக்கைகள் மீது வருமானத்தை உறுதிப்படுத்தி வரி அறவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டு முதல் கணக்காய்வு அறிக்கைகள் மீது வரி அறவிடப்படும் எனவும் மற்றும் இந்த நிறுவனத்திற்கு எதிராக எதிர்காலத்தில் வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஹிக்கடுவ நகர சபை கா/மஹாமாயா வித்தியாலயம் (பழைய) அமைந்துள்ள காணியில் உள்ள கட்டிடம் ஒன்று சபை ஆரம்பம் முதல் நடாத்தப்பட்டு வந்த போதிலும் இந்தக் காணியின் உரிமையை உரித்தாக்குவதற்கு முடியாதிருந்தது. | உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2005 மற்றும் 2015 ஆகிய காலப் பகுதியில் பல்வேறு நிறுவனங்களில் இருந்து சபைக்குக் கிடைத்திருந்த 09 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### 3.4.2 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமாக வாகனங்கள் திருத்த வேலை மேற்கொள்ளும் வேலைத் தளம் ஒன்று காணப்பட்ட போதிலும் வாகன திருத்த வேலைக்கான நிரந்தர தொழிநுட்ப உத்தியோகத்தர் இன்மையால் 2019 ஜனவரி 21 ஆந் திகதியில் உள்ளவாறு 08 வாகனங்கள் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டு திருத்த வேலைக்காக அனுப்பப்பட்ட போதிலும் திருத்த வேலைகள் மேற்கொள்ள முடியாமல் காணப்பட்டது. | விரைவாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும். |

**3.5 பெறுகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 3,756,539 இற்கான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும், அந்தக் கொள்வனவு தொடர்பாக பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு செலவு விடயத்தில் ரூபா 1,900,000 தொகைக்கான மதிப்பிடப்பட்ட மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | 03 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 14,699,585 இற்கான சேமிப்புக் காணப்பட்டதுடன், அந்தப் பெறுமதிகள் 28 சதவீதம் முதல் 87 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (இ) | 02 செலவு விடயங்களில் பிரதி கூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 5,920,885 தொகை காணப்பட்ட துடன், அப்பெறுமதி 64 சதவீதத்திற்கும் 335 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஈ) | 06 வருமான விடயங்களில் நெருங்கி இருக்காத இலக்கு வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 21,552,331 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதி 21 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளுராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் வினவி இருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாண ங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன். |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜுன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங் கள் நடாத்தப் பட வேண்டும். | எதிர்காலத்தில் குழுக் களை செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |